**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**
**சாட்சிகளின் வாக்குமூலம்**
**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 104/2022**

**நாள்: 24.09.2025**

**அரசு தரப்பு சாட்சி** : 5 (LW6)

2025ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 24ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முத்துராமு | ஜாதி | |
| தந்தை பெயர் | மூக்கன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

( A2, A3, A4, A6, A7 ஆஜர். A1, A5 ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு ஏற்கப்பட்டது. )

<u>முதன்மை விசாரணை:</u>

நான் தற்போது பாப்பநேந்தல் கிராமத்தில் குடியிருந்து, விவசாயம் செய்து வருகிறேன். சாட்சி வளர்மதி எனது மருமகள். சாட்சி முனியராஜை எனக்குத் தெரியாது. இந்த வழக்கில் இறந்துபோன கருப்பையா எனது மகன். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது. என் மகன் எப்படி, எதனால் இறந்தார் என்று எனக்குத் தெரியாது. சுமார் 3 வருடத்திற்கு முன்பு ஒருநாள் என் மகன் இறந்துவிட்டதாக எனது மருமகள் எனக்கு தகவல் சொன்னார். நான் அப்போது பாப்பநேந்தலில் இருந்தேன். தகவல் கிடைத்தவுடன் கமுதி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். எனது மகனின் பிரேதத்தில் பிணவறையில் வைத்திருந்தார்கள், என்னை உள்ளே விடவில்லை.



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.24 15:47:24 +0530

என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த **கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.1** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய Sec.154 of Indian Evidence Act ன் படி அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.

<u>அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை</u>

என்னை போலிசார் விசாரித்தார்கள் என்றும், அப்போது எனது மகன் கருப்பையா இறந்தது தொடர்பாக எனது மருமகள் வளர்மதி போலிஸில் புகார் கொடுத்தார் என்றும், அதில் நானும் சாட்சி முனியராஜ் என்பவரும் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளோம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது மறதி காரணமாக எதற்காக கையொப்பம் போட்டேன் என்று தெரியாமல் மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

கீழக்காக்குளத்தை சேர்ந்த காளீஸ்வரி என்பவரை இந்த வழக்கின் 1வது எதிரி ரமேஷ்குமார் கையை பிடித்து இழுத்துவிட்டதால், மேற்படி ரமேஷ்குமாரை எனது மகனும், எனது மருமகள் ஊரை சேர்ந்தவர்களும் ஊரில் கட்டிவைத்து அடித்து கண்டித்து அனுப்பிவைத்தார்கள் என்றும், அந்த முன்பகை காரணமாக எதிரிகள் என் மகனை கொன்றுவிட்டார்கள் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> – இல்லை.

<u>மறு விசாரணை</u> – இல்லை.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.24 15:47:27 +0530

முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .